**வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரர் (சிவன் கோவில்) சூரன் பற்றிய வரலாறு.**

வல்வை வைத்தீஸ்வரர் (சிவன்) ஆலயத்தில் சூரன்போர் திருவிழாவின் போது பயன்படுத்தப்படும் சூரன், வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த வல்லியப்பர் முருகுப்பிள்ளை என்பவரின் தலைமையிலான குழுவினரால் 1898இல் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும்.

இதன் பாதத்திலுள்ள வாசகங்களைக் கீழ்க் காணலாம்.

**இந்தத் தருமம் வல்வெட்டித்துறை வல்லியப்பர் முருகுப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை கதிரிப்பிள்ளை மு.இராமலிங்கப்பிள்ளை.**
**1 2 3 4**

குறிப்பு :- சிவன் கோவில் கட்டத் தொடங்கியது. 1867

(சங்குஸ்தானம் - அத்திவாரமிடல்)

கும்பாபிஷேகம் 1883

சூரன் கொண்டு வரப்பட்டது. 1898

வரலாற்றுச் சான்றுகளின் படியும், சூரபத்மனின் பாதத்தில் பொறிக்கப்பட்டுள்ள குறிப்புக்களின்படியும் பின்வரும் தகவல்களை ஊகித்தும் வரலாற்று செயல்பாடுகளை அவதானித்தும் தரக்கூடியதாக உள்ளது.

இவ் ஆக்கத்தினை நடராஜா சிவரட்ணம் (ஜெயம்) என்பவரும், ஆதிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளராக (Assistant General Manager – NP) கடடையாற்றி, ஓய்வுநிலையிலிருக்கும் நான், இந்த சூரனை இந்தியாவிலிருந்து கொண்டுவந்த வல்லியப்பர் முருகுப்பிள்ளை (1830) எனும் பிதாமகனின் வழிவந்த பூட்டனும் ஆவேன்.

என்னுடைய தாயாராகிய ஆதிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சீட்டுக்கார வள்ளியம்மாள் என அறியப்பட்டவருமான வடிவேல் நடராஜா (மதவடி) பெண் வள்ளியம்மாள் கூறிய, வரலாறுகளிலிருந்து இவ்வாக்கத்தினை தொகுக்க கூடியதாக உள்ளது.

இந்த நடராஜா வள்ளியம்மாள், பிதாமகன் வல்லியப்பர் முருகுப்பிள்ளை சிவலை முருகர் அவரின் ஒரேயொரு பெண்வழி பூட்டியாவார். இவரின் மகனே இக்கட்டுரையாளரும் ஆவார்.

**வரலாறு:**

இச்சூரனை வல்வியப்பர் முருகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வந்தவர்களுள், அக்காலத்தில் (1898) ஆதிவைரவர் கோவில் நிர்வாகத்தில் இருந்து செயற்பட்டு பணியாற்றியவர்களான பின்வருவோர் அடங்குவர்.

**இந்தத் தருமம் வல்வெட்டித்துறை வல்லியப்பர் முருகுப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை கதிரிப்பிள்ளை மு.இராமலிங்கப்பிள்ளை.**

இக்குழுவினரே இச்சூரனை கடல்மார்க்கமாக கொண்டு வந்து சிவன் கோவிலுக்கு அர்பணிப்புச் செய்தனர். இதனால் இப்பரம்பரை வழி வந்தோருக்கே சூரன்போர் திருவிழாவை முன்னின்று நடத்துவதற்குரிய உரிமம் வழங்கப்பட்டு சிவன் கோவில் பதிவேடுகளிலும் பதிவாகியுள்ளது.(பட்டோலைப்படி) இதனால் இப்பரம்பரையினரே இன்றுவரை இச்சூரன்போர் திருவிழாவை தொடர்ந்து நடாத்தி வருகின்றனர்.

ஆதிகால வழக்கப்படி இப்படியான காரியங்களில் பங்கு கொள்ள ஆண்வழிச் சந்ததியினருக்கே உரித்து உண்டு. இதனாலேயோ என்னவோ குடும்பத்தினருக்கு இத்திருவிழாவில் பங்கு இல்லை. ஏனெனில் சிவலை முருகரின் (வல்லியப்பர் முருகுப்பிள்ளை) அவர்களின் ஒரேயொரு மகளான மாணிக்கம் என்பவரின் பெண் வாரிசு வழிவந்தர்கள்தான் எனது தாயாராகிய வள்ளியம்மாள் ஆவார். இதனால்தான் எமது குடும்பத்தினருக்கு சூரன்போர் திருவிழாவில் பங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட வரலாறுகளின்படி வல்லியப்பர் முருகுப்பிள்ளை ஆண் வாரிசு சந்ததியினரும், ஏனையவர்களின் ஆண் வாரிசு சந்ததியினருமெ இச் சூரன்போர் திருவிழாவை இன்றுவரை நடாத்தி வருகின்றனர்.

தற்போதுள்ளபடி இத்திருவிழாவின் உரித்துடையவர்களாக சூரனின் பாதத்தில் குறிக்கப்பட்ட எழுத்துக்கலுள்ள பிரமுகர்களின் ஆண் சந்ததியினர் வருமாறு.